# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலக்கம் 20, வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2014.03.18

**தாபனச் சுற்றறிக்கை இலக்கம் : 03/2014**

பல்கலைக்கழக உபவேந்தர்கள்

வளாக அதிபதிகள்

நிறுவகப் பணிப்பாளர்கள்

**சலுகை அடிப்படையில் புகையிரத ஆணைச் சீட்டைப் பெற்றுக்கொள்ளல்.**

2013.11.21 ஆம் திகதிய 26/2013 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

2014.01.23 ஆம் திகதி கூடிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 888 ஆவது கூட்டத்தில், "தாபன விதிக்கோவையின் XVI ஆம் அத்தியாயத்தின் 2:5, 2:6 மற்றும் 2:7 ஆம் உப பிரிவுகளைத் திருத்துதல்" எனும் தலைப்பிலான 2013.11.21 ஆம் திகதிய 26/2013 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையினை பல்கலைக்கழகக் கட்டமைப்பிலும் அமுல்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. (26/2013 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.)

இது சம்பந்தமாக ஏற்கனவே அமுல்படுத்தப்படும் விதிமுறைகளில் எவ்வித மாற்றங்களும் ஏற்படுத்தப்படவில்லை.

இதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பணிவாய் வேண்டுகின்றேன்.

ஒப்பம்: பேராசிரியர் ஷனிக்கா ஹிரிம்புரேகம

தலைவர்

பிரதிகள்:-

1. செயலாளர், உயர் கல்வி அமைச்சு
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
4. உறுப்பினர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
6. பீடாதிபதிகள்
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்
8. கணக்காளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars)
10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள், உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப் பதிவாளர்கள் / சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள் / உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
12. பிரதி நிதிப் பொறுப்பாளரகள் / சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர்கள் / உதவி நிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் / உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. சகல தொழிற்சங்களினதும் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் நாயகம்.

கோப்பு இலக்கம் : UGC/HR/6/3/10

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல : 26/2013

எனது இலக்கம்:-EST-7/WARNT/07/1010
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு - 07

2013.11.21

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணங்களின் பிரதான செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**தாபன விதிக்கோவையின் XVI ஆம் அத்தியாயத்தில் 2:5 , 2:6 மற்றும் 2:7ஆம் உப பிரிவுகளைத் திருத்துதல்**

தாபன விதிக்கோவையின் XVI ஆம் அத்தியாயத்தில் 2 ஆம் பிரிவின் மீது உங்கள் கவனத்தைக் கோருகின்றேன்

02. அதில் 2:5. 2:6 மற்றும் 2:7 ஆம் உப பிரிவுகளை கீழ் வருமாறு திருத்துவதற்கு 2013.10.03 தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றேன்

2:5. சகல ஆணைச்சீட்டுகளிலும் பயணிக்கும் தினத்தினை திட்டவட்டமாகக் குறிப்பிடவும் வழங்கிய தினம் மற்றும் பயணிக்கும் தினம் என்பவற்றிற்கு இடைப்பட்ட காலம் 2:7 ஆம் உப பிரிவில் காட்டப்பட்டுள்ள விதிவிலக்கிறகு அமைய 30 நாட்களுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும்

2:6. அவ்வாறெனினும் ஆணைச்சீட்டில் காட்டப்பட்டுள்ள பயணிக்கும் தினம் இற்கு முன்னரான 14 நாட்களுக்குள அல்லது அத்தினத்திற்குப் பின்னரான 14 நாட்களுக்குள் ஆணைப்பத்திரத்தைப் பயன்படுத்த வேண்டும்

2:7 முன்கூட்டியே ஆசன வசதிகளைப் பதிவு செய்து கொள்ள முடிந்த சந்தர்ப்பங்களில் (அதாவது உறங்கள் அறை, கண்காட்சிக்கூடம், குளிரூட்டப்பட்ப அறை, என்பன) ஆணைச்சீட்டொன்று வழங்கப்படுகின்ற நபருக்கு செல்கின்ற பயணத்திற்காக ஆசனங்களை முன்கூட்டியே ஒதுக்கிக் கொள்கின்ற போதே திரும்பி வருகின்ற பயணத்திற்காகவும் முன்கூட்டியே ஆசனங்களை ஒதுக்கிக் கொள்வதை இயலச்செயவதற்காக திரும்பி வருவதற்கென வழங்கப்படுகின்ற திகதியிலிருந்து 45 நாட்களைத் தாண்டாத நாள் ஒன்றினை பயணத்திகதியாகக் குறிப்பிட முடியும்.

ஒப்பம்:/ பி.பீ அபேகோன்
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு